# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2024

1. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை சுகாதார அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு **01.01.2024 தொடக்கம் 31.12.2024** வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2023.12.12 - 2023.12.27 நண்பகல் 12.00 மணிவரை**
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2023.12.27 பி.ப 14.00 மணி வரை**
   **கேள்வி திறக்கும் திகதி : 2023.12.27 பி.ப 14.05 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. எம்மால் குறிப்பிடப்பட்ட கேள்வித்தொகையிலும் கூடிய கேள்வித்தொகையினை கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
5. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் **சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**
6. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
7. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக **ரூபா 50,000/=** ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **மூலப்பிரதி இணைப்பிரதி** ஆகியவற்றை தனித்தனி தபால் உறைகளில் இட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு இரு கடித உறைகளையும் ஒரு கடித உறையினுள் இட்டு அக் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.) அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய திகதியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
9. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
10. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவடைந்ததனை தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்..
11. இக்கேள்வி கோரல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
12. மேலதிக நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் கேள்விப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதுடன் மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் நேரடியாகவோ 021 222 8867 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சுத்திகரிப்பு சேவை மேற்கொள்ள வேண்டிய இடங்கள் | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த ஆளணி | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கட்டாய நேரம் | ஆகக்கூடிய கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | அச்சுவேலி பொதுச்சந்தையும் அச்சுவேலி பேருந்து நிலையமும் | 02 | காலை 6.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை | 2,225,750.00 |
| 2 | புத்தூர் பொதுச் சந்தை | 01 | காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை | |

**தலைவர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
*2023.12.12*